Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com R.DIS No: 60/2021 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான சிறப்பு
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | திங்கள்கிழமை, ஜூலை 19, 2021 | 4 பக்கங்கள் | ரூ.2/- | இதழ் 5

3-வது அலை வராமல் இருக்க காய்ச்சல் முகாம்களை அதிகரிப்பது, மார்க்கெட், கடைவீதிகள் தொற்று பரவாமல் தடுக்க கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் - மு.க.ஸ்டாலின்

சென்னை, ஜூலை 19 2021: தமிழ்நாட்டில் கொரோனா தாக்கம் தற்போது குறைந்து வருகிறது. இதனால் ஊரடங்கு தளர்வுகளும் படிப்படியாக வழங்கப்பட்டு உள்ளன.

கடந்த மே மாதம் 24-ந் தேதி முதல் ஒவ்வொரு வாரமும் பல்வேறு தளர்வுகளுடன் ஊரடங்கு அமல்படுத்தப்பட்டு வரும் நிலையில் 10-வது முறையாக நாளை முதல் தளர்வுகளுடன் ஊரடங்கு 31-ந்தேதி வரை

நீட்டிக்கப்பட்டுள்ளது.

இந்த ஊரடங்கு தளர்வு காரணமாக கடை வீதிகளில் கூட்டம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. மீன் மார்க்கெட், இறைச்சி கூடங்களிலும் கூட்டம் அலைமோத தொடங்கி விட்டன.

இதனால் மீண்டும் கொரோனா பரவல் அதிகரித்து விடுமோ என்ற அச்சம் ஏற்பட தொடங்கி உள்ளது. பல இடங்களில் மளிகை கடைக்காரர்கள், டீ கடைக்காரர்கள், வியாபாரிகள் பலர் முக கவசம் அணியாமல் அலட்சியமாக வியாபாரம் செய்யத் தொடங்கிவிட்டனர்.

கடைகளுக்கு வரும் வாடிக்கையாளர்கள்தான் முகக்கவசம் அணியும் நிலை பல இடங்களில் காணப்படுகிறது. இதனால் இவற்றை கண்காணித்து கட்டுப்படுத்த அரசு அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி பகுதிகளில் எந்தெந்த கடை வீதிகளில் கூட்டம் அதிகமாக காணப்படுகிறதோ அங்கு கொரோனா வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றாத கடைகளுக்கு சீல் வைக்கும் நடவடிக்கைகளிலும் அதிகாரிகள் இறங்கி உள்ளனர்.

வணிக பகுதிகளை கண்காணிக்க போலீசாரும், அதிகாரிகள் குழுவினரும் அவ்வப்போது ரோந்து சுற்றி வருகின்றனர்.

இந்த நிலையில் கொரோனா 3-வது அலை ஏற்பட்டால் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டு வருவதால், அதை முன்கூட்டியே சமாளிக்க மாநில அரசு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று பிரதமர் மோடி தமிழகம் உள்பட 6 மாநில முதல் மந்திரிகளுடன் நேற்று முன்தினம் காணொலியில் பேசினார்.

அப்போது தமிழகத்தில் எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் விரிவாக எடுத்துரைத்தார்.

இந்த நிலையில் இன்று அனைத்து மாவட்ட கலெக்டர்களுடன் தலைமை செயலாளர் இறையன்பு காணொலி வாயிலாக விரிவான ஆலோசனை மேற்கொண்டார்.

சென்னை தலைமை செயலகத்தில் உள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையின் 10-வது மாடியில் உள்ள கூட்டரங்கில் இந்த ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் ஒவ்வொரு மாவட்ட கலெக்டர்களையும் தொடர்புகொண்டு தலைமை செயலாளர் காணொலியில் பேசினார். கொரோனா பரவல் தற்போது கட்டுப்படுத்தப்பட்டுள்ள நிலையில் மீண்டும் அது பரவாமல் தடுக்க என்னென்ன முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று விரிவாக கேட்டறிந்தார்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் இதுவரை எவ்வளவு பேருக்கு தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன. இன்னும் எவ்வளவு பேருக்கு தடுப்பூசி போடப்பட வேண்டும் என்ற விவரங்களும் கேட்டறியப்பட்டன.

பக்கத்து மாநிலங்களான ஆந்திரா, கர்நாடகா, கேரளா மட்டுமின்றி மகாராஷ்டிரா மாநிலத்திலும் கொரோனா மீண்டும் அதிகம் பரவுவதால் தமிழகத்தில் என்னென்ன முன்னேற்பாடுகள் மேற்கொள்ளவேண்டும் என்பது குறித்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார்.

கொரோனா 3-வது அலை வராமல் இருக்க காய்ச்சல் முகாம்களை அதிகரிப்பது, சுகாதார பணியாளர்களை முடுக்கி விடுவது போன்ற பணிகளை தீவிரப்படுத்தும் படியும் கேட்டுக்கொண்டார்.

குறிப்பாக மார்க்கெட், கடைவீதிகள் போன்ற மக்கள் அதிகம் கூடும் இடங்களில் தொற்று பரவாமல் தடுக்க கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். இதற்காக அதிகாரிகள் குழுக்களை அமைத்து அரசு அறிவித்துள்ள வழிகாட்டு நெறிமுறைகளை கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டும் என்று வலியுறுத்தவும் கேட்டுக்கொண்டார்.

இது தொடர்பாக ஒவ்வொரு மாவட்ட கலெக்டர்களும் தங்களது மாவட்டங்களில் எடுத்துள்ள நடவடிக்கைகளை விளக்கி கூறினார்கள்.

இந்த கூட்டத்தில் வருவாய் பேரிடர், மேலாண்மை துறை கூடுதல் தலைமை செயலாளர் பணீந்திர ரெட்டி, உணவு, கூட்டுறவுத் துறை கூடுதல் தலைமை செயலாளர் நசீமுதின், சுகாதாரத்துறை செயலாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், வருவாய் துறை முதன்மை செயலாளர் குமார் ஜெயின், சென்னை மாநகராட்சி கமிஷனர் ககன்தீப்சிங் பேடி, குடும்ப நலத்துறை சிறப்புப் பணி முதன்மை செயலாளர் செந்தில்குமார், போலீஸ் டி.ஜி.பி. சைலேந்திரபாபு, சென்னை போலீஸ் கமிஷனர் சங்கர்ஜிவால், சிவில் சப்ளை பாதுகாப்புத் துறை கமிஷனர் ஆனந்தகுமார்.

தேசிய சுகாதார மிஷன் இயக்குனர் டாரஸ் அகமது, பொதுத்துறை செயலாளர் ஜெகநாதன், சிவில் சப்ளை துறை நிர்வாக இயக்குனர் ராஜாராமன், உங்கள் தொகுதியில் முதல் -அமைச்சர் துறை சிறப்பு அதிகாரி ஷில்பா பிரபாகர் சதீஷ், கூட்டுறவுத்துறை பதிவாளர் சண்முக சுந்தரம், தமிழ்நாடு சுகாதார திட்ட இயக்குனர் உமா, தமிழ்நாடு மருத்துவ கழக நிர்வாக இயக்குனர் தீபக் ஜேக்கப் ஆகிய மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் இந்த கூட்டத்தில் பங்கேற்றனர். இவர்களுடன் மருத்துவத் துறை இயக்குனர்களும் பங்கேற்றனர்.

"பேனர் வைக்கும் கலாச்சாரத்தை அறவே கைவிடுங்கள்; மீறினால் நடவடிக்கை திமுக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி எம்.பி.,

சென்னை, ஜூலை 19, 2021 "பேனர் கலாச்சாரத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்" என்று திமுக தலைவர் ஸ்டாலின் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார். ஆனால் இன்னும் கூட ஆங்காங்கே திமுகவினரும் - திமுக நிர்வாகிகளும் பேனர்களை வைப்பது தொடர்கிறது. போக்குவரத்திற்கு இடையூறாகவும், பொதுமக்களுக்கு ஆபத்தை உருவாக்கும் வகையிலும் தமிழ்நாட்டில் சென்ற அ.தி.மு.க. ஆட்சியில் கடைப்பிடிக்கப்பட்ட பேனர் கலாச்சாரத்தால் மரணங்களும், விபத்துக்களும் நிகழ்ந்த நிலையில் - "எங்கள் கட்சியின் சார்பில் பேனர்கள் வைக்கமாட்டோம்" என்று முதன் முதலில் உயர்நீதிமன்றத்தில் திமுக தலைவர் தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சத்தியப் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்தது என்பதைக் திமுகவினர் அனைவரும் அறிவீர்கள்.

அதன்பிறகு, கழகத்தினர் பெரும்பாலானோர் பேனர் வைக்கும் பழக்கத்தைக் கைவிட்டுள்ளனர் என்றாலும், ஒரு சிலர் இன்னும் பேனர்களை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இது போன்ற நடவடிக்கைகளைக் கழகம் ஒருபோதும் அனுமதிக்காது.

ஆகவே அனுமதியின்றி பேனர்கள் ஏதும் இனி வைக்கவே கூடாது என்று திமுகவினர் அனைவரையும் அன்போடு கேட்டுக் கொள்கிறேன். கழகத் தலைவர் ஆணையை மீறுவோர் யாராக

இருந்தாலும் அவர்கள் மீது திமுக தலைமைக் கழகம் நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

புதுச்சேரி: தெலுங்கானா ஆளுநர் மற்றும் புதுச்சேரி துணை நிலை ஆளுநர் டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன் தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை சந்தித்து வாழ்த்து பெற்றார்.

31 மசோதாக்கள், 6 அவசர சட்டங்களை நிறைவேற்ற பாராளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் இன்று தொடங்க உள்ளது

சென்னை, ஜூலை 19, 2021 பாராளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் (திங்கட்கிழமை) தொடங்க உள்ளது. இந்த கூட்டத்தொடர் அடுத்த மாதம் (ஆகஸ்டு) 13-ந் தேதி வரை நடைபெறும்.

இந்த கூட்டத்தொடர் வழக்கம் போல காலை 11 மணிக்கு தொடங்கி மாலை 6 மணி வரை நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பாராளுமன்ற வளாகத்தில் விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. கொரோனா பரவல் அச்சுறுத்தல் இருப்பதால் அதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பாராளுமன்றத்தில் தற்போது 539 எம்.பி.க்கள் உள்ளனர். கடந்த வருடம் பாராளுமன்றம் கூடியபோது சமூக இடைவெளியை கடைப்பிடிப்பதற்காக எம்.பி.க்கள் குறிப்பிட்ட இடங்களில் அமர வைக்கப்பட்டனர்.

தற்போதும் மக்களவை இருக்கைகளில் 280 எம்.பிக்கள் அமர வைக்கப்படுகிறார்கள். மீதமுள்ள 259 எம்.பி.க்கள் பார்வையாளர்கள் மாடத்தில் அமர வைக்கப்படுவார்கள்.

இதன் காரணமாக பாராளுமன்ற கூட்டத்தொடரை பார்க்க பார்வையாளர்களுக்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.

இந்த மழைக்கால கூட்டத்தொடரில் 31 மசோதாக்களை கொண்டு வந்து நிறைவேற்ற மத்திய அரசு தீர்மானித்துள்ளது. அதுபோல 6 அவசர சட்டங் களை நிறைவேற்றவும் மத்திய அரசு திட்ட மிட்டுள்ளது.

இந்த கூட்டத்தொடரில் 19 அமர்வுகள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. அந்த சமயங்களில் முக்கிய விவகாரங்கள் குறித்து விவாதங்கள் நடைபெறும். அரசின் முக்கிய கொள்கை அறிவிப்புகளை இந்த கூட்டத்தொடரில் வெளியிட பிரதமர் மோடி முடிவு செய்துள்ளார்.

இந்த கூட்டத்தொடரில் மத்திய அரசுக்கு எதிரான பல முக்கிய விவகாரங்களை

எழுப்ப எதிர்கட்சிகள் திட்டமிட்டுள்ளன. குறிப்பாக கொரோனா தடுப்பூசி தட்டுப்பாடு, ரபேல் விமான ஒப்பந்த முறைகேடு புகாரில் பிரான்சில் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டு இருப்பது, விவசாயிகள் போராட்டம், பெட்ரோல், டீசல் விலை உயர்வு போன்றவை குறித்து எதிர்கட்சிகள் கேள்விகளை எழுப்பும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ரபேல் விமான ஒப்பந்த முறைகேடு புகார்கள் தொடர்பாக பாராளுமன்ற கூட்டுக்குழு விசாரணைக்கு காங்கிரஸ் கட்சி தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. பாராளுமன்றத்திலும் இந்த கோரிக்கையை காங்கிரஸ் கட்சி எழுப்ப உள்ளது.

மத்திய அரசு கொண்டு வந்துள்ள 3 புதிய வேளாண் சட்டங்களை எதிர்த்து பஞ்சாப் விவசாயிகள் டெல்லியில் தொடர் போராட்டம் நடத்தி வருகிறார்கள். இந்த வேளாண் சட்டங்களை ரத்து செய்வது தொடர்பாக இந்த கூட்டத்தொடரில் காங்கிரஸ் கேள்வியை எழுப்பும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இது தவிர மாநில வாரியாகவும் இடம் பெற்றுள்ள கட்சிகள் தனது மாநில கோரிக்கையை வலியுறுத்தி இந்த கூட்டத் தொடரில் கோ□ஷங்களை எழுப்புவார்கள் என்று தெரிகிறது. குறிப்பாக தமிழகத்தை சேர்ந்த தி.மு.க. மற்றும் கூட்டணி கட்சி எம்.பி.க்கள் காவிரி நதியின் குறுக்கே மேகதாதுவில் கர்நாடக அரசு அணை கட்டும் பிரச்சனையை எழுப்புவார்கள் என்று தெரிகிறது.

தமிழகத்தில் நீட் தேர்வுக்கு விலக்கு அளிக்க வேண்டும் என்று தி.மு.க. தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. பாராளுமன்ற கூட்டத்தொடரில் தி.மு.க. எம்.பி.க்கள் இந்த கோரிக்கையை வலியுறுத்த முடிவு செய்துள்ளனர்.

இதனால் பாராளுமன்ற நடவடிக்கைகள் சுமூகமாக நடைபெறுமா என்பதில் கேள்விக்குறி எழுந்துள்ளது. பாராளுமன்ற மழைக்கால கூட்டத்தொடரை பயனுள்ள வகையில் நடத்தி முடிக்க மத்திய அரசு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

பாராளுமன்ற மேல்சபையை சிறப்பாக நடத்துவது குறித்து துணை ஜனாதிபதி வெங்கய்யா நாயுடு நேற்று ஆலோசனை நடத்தினார். அப்போது அவர் மேல்சபை நடவடிக்கைகள் சுமூகமாக நடக்க எதிர்கட்சிகள் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இந்த நிலையில் இன்று பகல் 11 மணிக்கு பாராளுமன்ற அனைத்துக்கட்சி கூட்டத்தை மத்திய அரசு நடத்தியது. பாராளுமன்ற விவகாரத்துறை மந்திரி பிரகலாத் ஜோஷி தலைமையில் நடந்த இந்த கூட்டத்தில் காங்கிரஸ், தி.மு.க., இடதுசாரிகள், ஆம்ஆத்மி உள்ளிட்ட பல்வேறு கட்சிகளின் பிரதிநிதிகள் பங்கேற்றனர். தி.மு.க. சார்பில் டி.ஆர்.பாலு, திருச்சி சிவா ஆகியோர் அனைத்துக்கட்சி கூட்டத்தில் கலந்து கொண்டனர். மழைக்கால கூட்டத்தொடரில் மேற்கொள்ள வேண்டிய அம்சங்கள் பற்றி இந்த கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

இந்த நிலையில் இன்று மாலை 4 மணிக்கு பாராளுமன்ற கட்சி தலைவர்களின் கூட்டத்திற்கு சபாநாயகர் ஓம்பிர்லா அழைப்பு விடுத்துள்ளார். இந்த கூட்டத்தில் மக்களவையில் எத்தகைய விவாதங்களை மேற்கொள்ள வேண்டும் என்பது பற்றி ஆய்வு செய்யப்பட உள்ளது.

இதற்கிடையே பாரதிய ஜனதாவின் நிர்வாக குழு கூட்டமும் இன்று டெல்லியில் நடக்கிறது. அதில் பாராளுமன்றத்தில் சிறப்பாக செயல்படுவது பற்றி பேசப்படுகிறது.

மற்றொருபுறம் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகளின் தலைவர்கள் கூட்டமும் டெல்லியில் நடக்கிறது. காங்கிரஸ் எம்.பி.க்கள் கூட்டத்தையும் சோனியா கூட்டி உள்ளார். சோனியா காந்தி காணொலி காட்சி மூலம் இந்த கூட்டத்தில் பங்கேற்கிறார்.

இந்த கூட்டத்தில் காங்கிரஸ் எம்.பி.க்கள் எவ்வாறு செயல்பட வேண்டும். எத்தகைய பிரச்சனைகளை பாராளுமன்றத்தில் எழுப்ப வேண்டும் என்பது பற்றி முடிவு செய்யப்படுகிறது. எல்லா கட்சிகளும் இன்று அடுத்தடுத்து ஆலோசனையில் ஈடுபட்டு இருப்பதால் டெல்லி அரசியலில் விறுவிறுப்பான சூழ்நிலை உருவானது.

இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்விசஸ்
11, SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்
ALL ONLINE SERVICES

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி
நிருபர்கள் தேவை
தமிழகமெங்கும் காலையில் வெளிவரும் ஹலோ மிரர் மெட்ராஸ் நாளிதழுக்கு மாவட்டம், தாலுகா, பகுதி, நகர வாரியாக அனுபவமுள்ள நிருபர்கள் தேவை
தொடர்புக்கு 8148231942
hellomadrasdaily@gmail.com

நீட் தேர்வில் இருந்து தமிழகத்துக்கு விலக்களிக்க வேண்டும் என கவனஈர்ப்பு தீர்மானம் கொண்டு வரப்படும் - டி.ஆர்.பாலு

சென்னை, ஜூலை 19 2021: பாராளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் நாளை தொடங்க உள்ள நிலையில், பாராளுமன்ற விவகாரத்துறை மந்திரி பிரகலாத் ஜோஷி தலைமையில் இன்று அனைத்துக்கட்சி கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் 33 கட்சிகளைச் சேர்ந்த 40க்கும் மேற்பட்ட எம்.பி.க்கள் கலந்துகொண்டனர். பாராளுமன்றத்தை சுமுகமாக நடத்துவது பற்றி கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

இக்கூட்டத்திற்கு பின்னர் செய்தியாளர்களை சந்தித்த திமுக எம்பி டி.ஆர்.பாலு, நீட் தேர்வில் இருந்து தமிழகத்துக்கு விலக்களிக்க வேண்டும் என கவனஈர்ப்பு தீர்மானம் கொண்டு வரப்படும் என தெரிவித்தார். கொரோனா குறித்து விரிவாக பேச மத்திய அரசு தயாராக இல்லை என்ற சந்தேகம் எழுந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

'பொருளாதார வீழ்ச்சி, விவசாய பிரச்சனை உள்ளிட்ட 13 பிரச்சனைகள் குறித்து அவையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டும் என திமுக சார்பில் நோட்டீஸ் அளிக்கப்பட்டுள்ளது. பெட்ரோல்-டீசல் விலை உயர்வு குறித்து விவாதிக்கவும் நோட்டீஸ் அளிக்கப்பட்டுள்ளது' என்றும் டி.ஆர்.பாலு எம்பி கூறினார்.

ஆகஸ்ட் 13ம் தேதி வரை நடைபெற உள்ள மழைக்கால

கூட்டத்தொடரில் மொத்தம் 19 அமர்வுகள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இந்தக் கூட்டத்தொடரில் எதிர்க்கட்சிகள் பல்வேறு பிரச்சனைகளை எழுப்பவுள்ளன.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

திங்கள்கிழமை,
ஜூலை 19 2021

ரூ.58.5 லட்சம் மதிப்புள்ள போதை மாத்திரைகள், எல்எஸ்டி ஸ்டாம்புகள் மற்றும் கஞ்சா ஆகியவற்றை சென்னை விமான நிலைய சுங்க அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்: இருவர் கைது

சென்னை, ஜூலை 19, 2021: ரூ.58.5 லட்சம் மதிப்புள்ள போதை மாத்திரைகள், எல்எஸ்டி ஸ்டாம்புகள் மற்றும் கஞ்சா ஆகியவற்றை சென்னை விமான நிலைய சுங்க அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். இது தொடர்பாக இருவர் கைது செய்யப்பட்டனர். போதைப் பொருள் கடத்தி வரப்படுவதாக, சென்னை விமான நிலைய சுங்கத்துறைக்கு கிடைத்த தகவல் படி, சென்னையில் வெளிநாட்டு தபால் அலுவலகத்துக்கு ஸ்பெயின் நாட்டில் இருந்து வந்த பார்சல் சோதனை செய்யப்பட்டது. அந்த அட்டைபெட்டி பார்சலை திறந்து பார்த்தபோது, ஒரு வாழ்த்து அட்டை மற்றும் இரண்டு சில்வர் நிற பிளாஸ்டிக் பைகள் இருந்தன. அவற்றில் ஒன்றை பிரித்து பார்த்தபோது, இளஞ்சிவப்பு நிற மாத்திரைகள் ஒரு பக்கத்தில் மண்டை ஓட்டு வடிவில் இருந்தன. இவை எம்டிஎம்ஏ போதை அல்லது பரவச மாத்திரைகள் என அழைக்கப்படுகிறது. மொத்தம் 994 மாத்திரைகள் இருந்தன. இவற்றின் மதிப்பு ரூ.50 லட்சம். இவை பறிமுதல் செய்யப்பட்டன. வாழ்த்து அட்டையை திறந்து பார்த்தபோது, அதில் உள்ள வெள்ளை நிற பிளாஸ்டிக் பாக்கெட்டில் லிஷிஞி "லிஷ்ஷ்ஷ்ரீவீநீ கிநீவீபீஞி வீமீமீ லீஷ்ற்ணீணீவீபீமீஸ்டாம்புகள் மறைத்து வைக்கப்பட்டிருந்தன. இவை உறிஞ்சும் தாளில் போதை மருந்து ஏற்றப்பட்ட வண்ண ஸ்டாம்புகள். இவை துண்டு துண்டாக ஒவ்வொரு டோஸாக எடுத்துக் கொள்ளப்படும் போதை மருந்து. இவற்றின் மதிப்பு ரூ.6 லட்சம். இந்த பார்சல் புதுச்சேரி ஆரோவில்லி பகுதியில் உள்ள ஜேஎம்ஜே மதர்லேண்ட் என்ற பெயரில் ஒருவருக்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்த முகவரியில் சென்னை விமான நிலைய சுங்கத்துறையினர் மற்றும் கடலூர் சுங்க அதிகாரிகள் சோதனை நடத்தினர். அங்கிருந்த இருவர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் வீட்டில் ஆந்திர மாநிலம் குண்டூரில் இருந்து வாங்கி வந்த இரு கஞ்சா பாக்கெட்டுகள் இருந்தன.

5.5 கிலோ எடையிலான இந்த கஞ்சாவின் மதிப்பு ரூ.2.5 லட்சம். இவையும் பறிமுதல் செய்யப்பட்டன. இந்த கடத்தல் தொடர்பாக திருநெல்வேலியைச் சேர்ந்த ஓவியர் ரூபக்மணிகண்டன், (29) கோழிப் பண்ணையில் வேலை செய்யும் லாய் வீகஸ்(28) ஆகியோர் கைது செய்யப்பட்டனர். இவர்கள் இருவரும் ஆலந்தூர் மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு நீதிமன்ற காவலில் வைக்கப்பட்டனர். மொத்தம் ரூ.58.5 லட்சம் மதிப்பிலான போதை மாத்திரைகள், எல்எஸ்டி ஸ்டாம்புகள் மற்றும் கஞ்சா ஆகியவை போதை பொருள் தடுப்பு சட்டத்தின் கீழ் பறிமுதல் செய்யப்பட்டன. இது தொடர்பாக மேலும் விசாரணை நடப்பதாக சென்னை சர்வதேச விமான நிலை சுங்க ஆணையர் ராஜன் சவுத்திரி தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடரை முன்னிட்டு அனைத்துக் கட்சி தலைவர்கள் கூட்டம்: அவையில் அர்த்தமுள்ள விவாதத்துக்கு பிரதமர் அழைப்பு

சென்னை, ஜூலை 19 2021: நாடாளுமன்றத்தின் மழைக்கால கூட்டத் தொடர் நாளை தொடங்குவதை முன்னிட்டு, இன்று அனைத்துக் கட்சி தலைவர்கள் கூட்டம் நடைப்பெற்றது. இந்த கூட்டத்தில் பேசிய பிரதமர் திரு நரேந்திர மோடி, எம்.பி.க்கள் மதிப்புமிக்க ஆலோசனைகளை இங்கே தெரிவித்துள்ளனர். இரு அவைகளிலும் அர்த்தமுள்ள விவாதம் நடைபெற வேண்டும் என்றார். பரிந்துரைகளை கூட்டாக அமல்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று அவர் உறுதியளித்தார். ஆரோக்கியமான ஜனநாயகம் என்ற நமது மரபின் அடிப்படையில், மக்கள் தொடர்பான பிரச்சினைகள் சுமூகமான முறையில் எழுப்பப்பட வேண்டும், இந்த விவாதங்களுக்கு பதில் அளிக்க, அரசுக்கு வாய்ப்பளிக்க வேண்டும். இந்த உகந்த சூழலை ஏற்படுத்துவது அனைவரது பொறுப்பு என பிரதமர் கூறினார். மக்கள் பிரதிநிதிகள் கள நிலவரத்தை உண்மையிலேயே அறிய வேண்டும், அப்போதுதான், விவாதத்தில் அவர்களின் பங்களிப்பு, முடிவு எடுக்கும் முறையை சிறப்பாக்கும் என அவர் கூறினார். எம்.பிக்கள் பலர் கொவிட் தடுப்பூசி போட்டுள்ளதால், நாடாளுமன்றத்தில் நம்பிக்கையுடன் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள உதவும் என அவர் கூறினார். நாடாளுமன்றத்தில் ஆரோக்கியமான விவாதங்கள் நடைபெற வேண்டும் என்றும், இதற்கு அனைத்து கட்சி தலைவர்களின் ஒத்துழைப்பும் தேவை என்றும் பிரதமர் அழைப்பு விடுத்தார். இந்த கூட்டத் தொடர் சுமூகமாக நடைப்பெற்று தனது பணிகளை நிறைவு செய்யும் என அவர் நம்பிக்கை தெரிவித்தார். கொவிட்-19 தொற்று காரணமாக உயிரிழந்தவர்களுக்கு அவர் இரங்கல் தெரிவித்தார். பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங், வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் மற்றும் நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் திரு பிரகலாத் ஜோஷி ஆகியோர் இந்த கூட்டத்தில் பங்கேற்றனர். இணையமைச்சர்கள் திரு அர்ஜுன் ராம் மெஹ்வல் மற்றும் திரு வி.முரளீதரன் ஆகியோரும் இந்த கூட்டத்தில் கலந்து கொண்டனர். காங்கிரஸ், திரிணாமுல் காங்கிரஸ், திமுக, ஒய்எஸ்ஆர் காங்கிரஸ், சிவசேனா, ஐக்கிய ஜனதா தளம், பிஜூ ஜனதா தளம், சமாஜ்வாதி, தெலங்கானா ராஷ்ட்ரிய சமிதி, பகுஜன் சமாஜ், தேசியவாத காங்கிரஸ், தெலுங்கு தேசம், அகாலி தளம், ராஷ்ட்ரிய ஜனதா தளம், ஆம்ஆத்மி கட்சி, இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்திய யூனியன் முஸ்லிம் லீக், மதிமுக, தமிழ் மாநில காங்கிரஸ், உட்பட 33 அரசியல் கட்சி தலைவர்கள் இந்த கூட்டத்தில் பங்கேற்றனர். நாடாளுமன்றத்தின் மழைக்கால கூட்டத் தொடர் நாளை தொடங்குவதை முன்னிட்டு, இன்று அனைத்துக் கட்சி தலைவர்கள் கூட்டம் நடைப்பெற்றது. இந்த கூட்டத்தில் பேசிய பிரதமர் திரு நரேந்திர மோடி, எம்.பி.க்கள் மதிப்புமிக்க ஆலோசனைகளை இங்கே தெரிவித்துள்ளனர். இரு அவைகளிலும் அர்த்தமுள்ள விவாதம் நடைபெற வேண்டும் என்றார். பரிந்துரைகளை கூட்டாக அமல்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று அவர் உறுதியளித்தார். ஆரோக்கியமான ஜனநாயகம் என்ற நமது மரபின் அடிப்படையில், மக்கள் தொடர்பான பிரச்சினைகள் சுமூகமான முறையில் எழுப்பப்பட வேண்டும், இந்த விவாதங்களுக்கு பதில் அளிக்க, அரசுக்கு வாய்ப்பளிக்க வேண்டும். இந்த உகந்த சூழலை ஏற்படுத்துவது அனைவரது பொறுப்பு என பிரதமர் கூறினார். மக்கள் பிரதிநிதிகள் கள நிலவரத்தை உண்மையிலேயே அறிய வேண்டும்,

அப்போதுதான், விவாதத்தில் அவர்களின் பங்களிப்பு, முடிவு எடுக்கும் முறையை சிறப்பாக்கும் என அவர் கூறினார். எம்.பிக்கள் பலர் கொவிட் தடுப்பூசி போட்டுள்ளதால், நாடாளுமன்றத்தில் நம்பிக்கையுடன் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள உதவும் என அவர் கூறினார். நாடாளுமன்றத்தில் ஆரோக்கியமான விவாதங்கள் நடைபெற வேண்டும் என்றும், இதற்கு அனைத்து கட்சி தலைவர்களின் ஒத்துழைப்பும் தேவை என்றும் பிரதமர் அழைப்பு விடுத்தார். இந்த கூட்டத் தொடர் சுமூகமாக நடைப்பெற்று தனது பணிகளை நிறைவு செய்யும் என அவர் நம்பிக்கை தெரிவித்தார். கொவிட்-19 தொற்று காரணமாக உயிரிழந்தவர்களுக்கு அவர் இரங்கல் தெரிவித்தார். பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங், வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் மற்றும் நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் திரு பிரகலாத் ஜோஷி ஆகியோர் இந்த கூட்டத்தில் பங்கேற்றனர். இணையமைச்சர்கள் திரு அர்ஜுன் ராம் மெஹ்வல் மற்றும் திரு வி.முரளீதரன் ஆகியோரும் இந்த கூட்டத்தில் கலந்து கொண்டனர். காங்கிரஸ், திரிணாமுல் காங்கிரஸ், திமுக, ஒய்எஸ்ஆர் காங்கிரஸ், சிவசேனா, ஐக்கிய ஜனதா தளம், பிஜூ ஜனதா தளம், சமாஜ்வாதி, தெலங்கானா ராஷ்ட்ரிய சமிதி, பகுஜன் சமாஜ், தேசியவாத காங்கிரஸ், தெலுங்கு தேசம், அகாலி தளம், ராஷ்ட்ரிய ஜனதா தளம், ஆம்ஆத்மி கட்சி, இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்திய யூனியன் முஸ்லிம் லீக், மதிமுக, தமிழ் மாநில காங்கிரஸ், உட்பட 33 அரசியல் கட்சி தலைவர்கள் இந்த கூட்டத்தில் பங்கேற்றனர்.

செகந்தராபாத் ராணுவ முகாம் பகுதியில் உள்ள சாலைகளை மூடுவது தொடர்பாக ஆய்வு செய்யுமாறு பாதுகாப்பு இணை அமைச்சருக்கு குடியரசு துணைத் தலைவர் அறிவுறுத்தல்

சென்னை, ஜூலை 19, 2021: செகந்தராபாத் ராணுவ முகாம் பகுதியைச் சுற்றி வசிக்கும் ஆயிரக்கணக்கான மக்களின் நலனிற்காக அங்குள்ள பொது சாலைகளை மூடுவது தொடர்பான பிரச்சினையை ஆய்வு செய்யுமாறு பாதுகாப்பு இணை அமைச்சர் திரு அஜய் பட்டிற்கு குடியரசு துணைத் தலைவர் திரு எம் வெங்கையா நாயுடு இன்று அறிவுரை வழங்கியுள்ளார்.

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இணையமைச்சர், குடியரசு துணைத் தலைவர் மாளிகையில் இன்று அவரை சந்தித்தபோது இது தொடர்பாக திரு நாயுடு பேசினார்.

செகந்தராபாத் ராணுவ முகாம் பகுதியில் வசிக்கும் மக்கள் சந்திக்கும் இடர்பாடுகளை குறைப்பதற்காக, சாலைகள் மூடப்படும் பிரச்சினையை விரிவாக ஆராயுமாறு யோசனை தெரிவித்தார்.

இதுதொடர்பாக மத்திய பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங்கிற்கு தெலங்கானா அரசு சார்பாக அண்மையில் அனுப்பப்பட்டுள்ள கடிதம் பற்றியும் திரு வெங்கையா நாயுடு குறிப்பிட்டார்.

இது சம்பந்தமாக ஆய்வு மேற்கொண்டு மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று குடியரசு துணைத் தலைவரிடம் அமைச்சர் உறுதியளித்தார்.

தென்மேற்கு பருவமழை குறித்து மத்திய அமைச்சர் டாக்டர் ஜித்தேந்திர சிங் ஆய்வு : இந்திய வானிலைத்துறைக்கு கூடுதல் ரேடார்கள்

சென்னை, ஜூலை 19, 2021: இந்திய வானிலைத் துறையின் தலைமையகத்துக்கு சென்ற மத்திய அமைச்சர் டாக்டர் ஜித்தேந்திர சிங் தென்மேற்கு பருவமழையின் போக்கு குறித்து ஆய்வு நடத்தினார். புவி அறிவியல் துறை இணையமைச்சர் (தனிப்பொறுப்பு) டாக்டர் ஜித்தேந்திர சிங், இந்திய வானிலைத் துறையின் தலைமையகத்தில் உள்ள மவுசம் (வானிலை) பவனுக்கு சென்றார். அங்கு ஒரு மணி நேரம் இருந்த டாக்டர் ஜித்தேந்திர சிங், தென்மேற்கு பருவமழையின் போக்குகள் குறித்து ஆய்வு செய்தார். செயற்கைகோள் மற்றும் ரேடார் பிரிவுகளுக்கு சென்ற டாக்டர் ஜித்தேந்திர சிங், நிகழ்நேர அடிப்படையில் வானிலை தகவல்களை பெறும் நடைமுறைகள் குறித்து ஆலோசித்தார். இந்திய வானிலைத் துறைக்கு தற்போது நாடு முழுவதும் 27 ரேடார்கள் உள்ளன எனவும், வரும் ஆண்டுகளில் இந்த எண்ணிக்கை 50 ஆக உயரும் என்றும் டாக்டர் ஜித்தேந்திர சிங்கிடம் அதிகாரிகள் கூறினர்.

இந்த ஆண்டு ஜூன் மாதத்தில், மழை இயல்பை விட 10 சதவீதம் அதிகமாக இருந்ததாகவும், ஜூலை மாதத்தில் தற்போது வரை 26 சதவீதம் குறைவாக உள்ளதாகவும், அமைச்சரிடம் இந்திய வானிலை துறை தலைமை இயக்குனர் டாக்டர் மிருத்யுஞ்ச மொஹாபத்ரா தெரிவித்தார். விவசாயிகளின் நன்மைக்காக, வேளாண்துறை அமைச்சகத்தின் எம்கிசான் இணையதளத்தை பயன்படுத்தி, நாடு முழுவதும் உள்ள விவசாயிகளுக்கு வாரம் இருமுறை 42 மில்லியனுக்கு மேற்பட்ட குறுந்தகவல்கள் தற்போது அனுப்பப்படுகின்றன. அதிநவீன மின்னல் முன்னறிவிப்பு கருவிகளை வைத்துள்ள உலகின் 5 நாடுகளில் இந்தியாவும் ஒன்று என டாக்டர் மொஹாபத்ரா கூறினார்.

நீட் தேர்வுக்கு விண்ணப் பிக்கும் அரசுப் பள்ளி மாணவர்கள் அவரவர் பள்ளிகள் வாயிலாக விண்ணப்பிக்க வேண்டும்

சென்னை, ஜூலை 19 2021: நீட் தேர்வு செப்டம்பர் மாதம் 12-ந் தேதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளதால் இதற்கு மாணவ- மாணவிகள் தயாராகி வருகிறார்கள்.

நீட் தேர்வுக்கு விண்ணப் பிக்கும் அரசுப் பள்ளி மாணவர்கள் அவரவர் பள்ளிகள் வாயிலாக விண்ணப்பிக்க வேண்டும் என பள்ளிக் கல்வித் துறை அறிவுறுத்தி உள்ளது.

கடந்த 16-ந் தேதி முதல் ஆன்லைன் விண்ணப்ப பதிவு நடைபெற்று வரும் நிலையில் அரசு உதவி பெறும் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள், நீட் தேர்வுக்கு விண்ணப்பிக்க விரும்பும் மாணவர்களை ஒன்றிணைத்து, பள்ளிகள் வாயிலாக பிழையின்றி விண்ணப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டுகளை போல் இந்த ஆண்டும் உரிய நடைமுறைகளை பின்பற்றி ஆகஸ்டு 6-ந் தேதிக்குள்ளாக பணிகளை முடிக்க தலைமை ஆசிரியர்களுக்கு பள்ளிக் கல்வித்துறை உத்தரவிட்டுள்ளது.

கடந்த கல்வி ஆண்டில் 16 ஆயிரம் அரசுப் பள்ளி மாணவர்கள் நீட் தேர்வு எழுதி இருந்தனர். இந்த ஆண்டு இந்த எண்ணிக்கை அதிகரிக்க கூடும் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

உத்தரப் பிரதேசத்தின் ராம்பூரில் பிராணவாயு ஆலையைத் தொடங்கி வைத்தார் மத்திய அமைச்சர் திரு முக்தார் அப்பாஸ் நக்வி

சென்னை, ஜூலை 19, 2021: உத்தரப் பிரதேசத்தில் ரேடிகோ கெய்தான் நிறுவனத்தால் நிறுவப்பட்டுள்ள 6 மருத்துவப் பிராணவாயு ஆலைகளில் ராம்பூரின் பிலாஸ்பூரில் உள்ள சமூக மருத்துவ மையத்தில் ஒரு ஆலையை மத்திய சிறுபான்மையின விவகாரங்கள் அமைச்சர் திரு முக்தார் அப்பாஸ் நக்வி இன்று தொடங்கி வைத்தார்.

அப்போது பேசிய அவர், கொரோனா பெருந்தொற்றை எதிர்கொள்வதற்காக பிரதமர் திரு நரேந்திர மோடி மேற்கொண்டுள்ள பல்வேறு நடவடிக்கைகளினால் பிரதம மந்திரியின் குடிமக்களுக்கான உதவி மற்றும் நிவாரணத்தின் (பிஎம் கேர்ஸ்) மூலம் சுமார் 1500 மருத்துவப் பிராணவாயு ஆலைகள் நாடு முழுவதும் நிறுவப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

ஒரு மணி நேரத்தில் 20 கியூபிக் மீட்டர் மருத்துவப் பிராணவாயுவை உற்பத்தி செய்யும் திறன் கொண்ட இந்த ஆறு ஆலைகள் ரேடிகோ கெய்தான் நிறுவனத்தால் பிலாஸ்பூர் (ராம்பூர்), பில்ஹார் (கான்பூர்), பக்வாந்த்பூர் (பிரயாக்ராஜ்), மஞ்ச்ஹன்பூர் (கௌசம்பி) மற்றும் மாணிக்பூர் (சித்ரகூட்) ஆகிய இடங்களில் உள்ள சமூக மருத்துவ மையங்களில் நிறுவப்பட்டு வருவதாக அவர் கூறினார். நிர்வாகத்தின் மேம்பட்ட வசதிகள் மற்றும் வளங்கள், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் கட்டுப்பாட்டினால் பெருந்தொற்று இல்லாத நாட்டை உருவாக்க முடியும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

14 வயது சிறுமியை காதலிப்பதாக ஆசை வார்த்தை கூறி திருமணம் செய்து பாலியல் தொல்லை கொடுத்த நபர் மற்றும் உதவி செய்த நண்பரும் கைது

சென்னை, ஜூலை 19, 2021: வண்ணாரப்பேட்டை காவல் மாவட்டத்தில் வசிக்கும் 14 வயது சிறுமியின் தந்தை கொடுத்த புகாரில், கணவன் மனைவி இருவரும் பிரிந்து வாழ்ந்து வருவதாகவும், இந்நிலையில் கடந்த (08.07.2021) அன்று தனது 14 வயது மகளை காசிமேடு பகுதியில் உள்ள சிறுமியின் தாயாரின் வீட்டில் விட்டுவிட்டு சென்றதாகவும், பின்னர் சில நாட்கள் கழித்து வந்து பார்த்தபோது சிறுமி காணவில்லை என்று சிறுமியின் தந்தை 14.07.2021 அன்று, காசிமேடு காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதன்பேரில் சிறுமி காணவில்லை சட்டப்பிரிவில் வழக்குப்பதிவு செய்து விசாரணை செய்தனர்.

காசிமேடு காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் விசாரணை செய்ததில், மேற்படி 14 வயது சிறுமியை, கடந்த 08.07.2021 அன்று சுபாஷ்சந்திரபோஸ், என்பவர் அழைத்துச் சென்றது தெரியவந்தது. மேலும் விசாரணையில் சுபாஷ்சந்திரபோஸ்-ன் நண்பரான கார்த்திக் (எ) சிலுவை கார்த்திக், என்பவர் மேற்படி 14 வயது சிறுமியிடம் காதலிப்பதாகவும், திருமணம் செய்து கொள்வதாகவும் ஆசை வார்த்தைகள் கூறி பழகி வந்துள்ள நிலையில் கடந்த 16.07.2021 அன்று சுபாஷ்சந்திரபோஸ் உதவியுடன் கார்த்திக் (எ) சிலுவை கார்த்திக் 14 வயது சிறுமியை திருமணம் செய்து கொண்டு பாலியல் தொல்லை கொடுத்தது தெரியவந்தது. அதன்பேரில் மேற்படி வழக்கானது, ராயபுரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு மாற்றப்பட்டு, சிறுமி காணவில்லை என்ற பிரிவில் பதிவு செய்யப்பட்ட வழக்கு, போக்சோ மற்றும் குழந்தை திருமண தடைச்சட்டம் உள்ளிட்ட சட்டப்பிரிவுகளில் மாற்றம் செய்யப்பட்டு, 14 வயது சிறுமியிடம் ஆசை வார்த்தைகள் கூறி திருமணம் செய்து கொண்டு பாலியல் தொல்லை கொடுத்த கார்த்திக் (எ) சிலுவை கார்த்திக், மற்றும் 14 வயது சிறுமியை அழைத்துச் சென்று திருமணம் செய்ய உதவிய சுபாஷ் சந்திரபோஸ், ஆகிய 2 நபர்களை 17.07.2021 அன்று கைது செய்தனர். மேலும் 14 வயது சிறுமி மீட்கப்பட்டு பெண்கள் மற்றும் குழந்தைகள் நல காப்பகத்தில் ஒப்படைக்கப்பட்டார்.

விசாரணைக்கு பின்னர், கைது செய்யப்பட்ட கார்த்திக் (எ) சிலுவை கார்த்திக் மற்றும் சுபாஷ் சந்திரபோஸ் ஆகிய இருவரும் நேற்று (18.07.2021) நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டனர்.

தொடர்மழையால் ரெயில் நிலையங்களில் வெள்ளம் சூழ்ந்துள்ளது மும்பை மின்சார ரெயில் சேவை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது

மும்பை, ஜீலை, 19 2021: மராட்டிய மாநிலத்தில் கடந்த சில தினங்களாக பருவமழை தீவிரமாக பெய்து வருகிறது. நேற்று முன்தினம் மும்பை மற்றும் புறநகர் பகுதிகளில் மிக பலத்த மழை பெய்தது.

நேற்று இரவும் இடைவிடாமல் நீண்ட நேரம் அடைமழை பெய்தது.

தொடர் மழை காரணமாக மும்பை நகரின் பெரும்பாலான பகுதிகளில் வெள்ள நீர் பெருக்கெடுத்து ஓடியபடி உள்ளது. பல பகுதிகள் வெள்ளத்தில் மிதக்கின்றன.

நேற்று இரவு 12 மணி முதல் 2 மணி வரை பெய்த அடை மழை காரணமாக சாலைகளில் மழை நீர் வெள்ளம் போல் தேங்கி நிற்கிறது. பெரும்பாலான இடங்களில் சாலைகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது.

சாலைகளும், ரெயில் தண்டவாளங்களும் மழை தண்ணீரில் மூழ்கி இருப்பதால் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. சியான், தாதர், காந்தி மார்க்கெட், செம்பூர், குர்லா, எல்.பி.எஸ்.ரோடு, சன்பத்தி உள்ளிட்ட பல பகுதிகளில் வெள்ளப்பெருக்கு அதிகமாக காணப்படுகிறது.

கடந்த 2005-ம் ஆண்டு ஜூலை மாதம் மும்பையில் 944 மில்லி மீட்டர் மழை பெய்து அந்த நகரையே மூழ்கடித்து இருந்தது. நேற்று இரவு பெய்த மழையும் அதை நினைவுபடுத்தும் வகையில் மிக உக்கிரமாக இருந்தது. விடிய விடிய பெய்த மழையால் சாலைகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டிருப்பதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

பெரும்பாலான பகுதிகளில் வாகனங்கள் இயக்கப்படவில்லை. பஸ்கள் அனைத்தும் நிறுத்தப்பட்டுள்ளன. சில இடங்களில் இருசக்கர வாகனங்களும், கார்களும் வெள்ளத்தில் மிதந்தபடி நிற்கின்றன.

தொடர்மழையால் ரெயில் நிலையங்களில் வெள்ளம் சூழ்ந்துள்ளது. இதனால் மும்பை மின்சார ரெயில் சேவை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. மும்பையில் இருந்து புறநகருக்கு இயக்கப்படும் அனைத்து ரெயில்களும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

வெளியூர்களில் இருந்து வரும் ரெயில்களும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

மும்பையில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக 22 பேர் பலியாகி உள்ளனர். நவிமும்பை பகுதிகளில் நிலச்சரிவு காரணமாக வாசிநகா என்ற இடத்தில் வீடு ஒன்று இடிந்து விழுந்ததில் ஒரே குடும்பத்தை சேர்ந்த 7 பேர் பலியானார்கள். இன்று அதிகாலை 6.30 மணிக்கு அந்த வீட்டின் சுவர் மீது நிலச்சரிவு விழுந்ததால் அனைவரும் வீட்டுக்குள் சிக்கிக் கொண்டனர்.

செம்பூர் பகுதியில் வீடுகள் இடிந்ததில் 11 பேர் உயிரிழந்தனர். மற்ற பகுதிகளில் மழை தண்ணீரில் சிக்கிய 4 பேர் உயிரிழந்துள்ளனர். நிலச்சரிவுகளில் மேலும் பலர் சிக்கி இருக்கலாம் என்று கருதப்படுகிறது. பேரிடர் மீட்பு குழு மூலம் நிவாரணப்பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. மழை தண்ணீர் அதிகம் உள்ள பகுதிகளுக்கு பொதுமக்கள் செல்ல வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மும்பையில் மழையால் வீடுகள் இடிந்து பலியானவர்களுக்கு பிரதமர் மோடி இரங்கல் தெரிவித்துள்ளார். உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு நிதியுதவி அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே மும்பையில் அடுத்த 2 நாட்களுக்கு மழை நீடிக்கும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது. இன்று காலை நிலவரப்படி 204 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது. இன்று மிக பலத்த மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் ரெயில் போக்குவரத்து முழுமையாக முடங்கி உள்ளது. மும்பையில் தினமும் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட உள்ளூர் ரெயில் சேவைகள் மூலம் சுமார் 75 லட்சம் பேர் பயணம் செய்வார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தடுப்பூசி போடுவேம்!
3வது அலையை எதிர்ப்போம்!!

கொரட்டூர் பகுதியில் வீட்டின் முன்பு நிறுத்தியிருந்த கார் மற்றும் ஆட்டோவை சேதப்படுத்திய 2 நபர்கள் கைது இருசக்கர வாகனம் பறிமுதல்

சென்னை, ஜூலை 19 2021: மதுரையிலிருந்து திண்டுக்கல் செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் 30 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது மதுரை மாவட்டத்திற்குட்பட்ட வாடிப்பட்டி பேரூராட்சி, மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் அமைந்துள்ள வாடிப்பட்டி மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் போடிநாயக்கன்பட்டியில் அமைந்துள்ள மேல்நிலை குடிநீர் தொட்டிகள் மூலம் தடையில்லாமல் குடிநீர் வழங்கி கொண்டிருக்கிறது பேரூராட்சி நிர்வாகம்.

இந்நிலையில் பெருகிவரும் மக்கட்தொகைக்கேற்பவும் விரிவாக்கப்பகுதிகளுக்கும் குடிநீர் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் வாடிப்பட்டி பேரூராட்சி அலுவலகம் எதிரே ரூ48.60 லட்சம் மதிப்பீட்டில் மேல்நிலை குடிநீர் தொட்டி கட்டும் பணி விரைவாகவும் சிறப்பாகவும் நடைபெற்று வருகிறது.

இதற்கான பணிகளை பேரூராட்சி செயல் அலுவலர் சிவக்குமார் தலைமையில் ஊழியர்கள், அலுவலர்கள் சிறப்பாக செய்து வருகின்றனர்.

வண்ணாரப்பேட்டையில் வசிக்கும் 16 வயது சிறுமியை கட்டாய திருமணம் செய்த ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த உறவினர் போக்சோ மற்றும் குழந்தை திருமண தடை சட்டத்தில் கைது.

சென்னை, ஜூலை 19 2021: வண்ணாரப்பேட்டை காவல் மாவட்டத்தில் வசிக்கும் 16 வயது சிறுமிக்கு அவரது பெற்றோர் கட்டாய திருமணம் செய்து வைத்துள்ளதாக கிடைத்த தகவலின் பேரில், திருவொற்றியூர் அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் மற்றும் சென்னை மாவட்ட சமூக நல அலுவலர் ஜெயஸ்ரீ தலைமையிலான அரசு அலுவலர்கள் மேற்படி சிறுமியின் வீட்டிற்கு சென்று விசாரணை செய்தனர்.

விசாரணையில் 16 வயது சிறுமிக்கு, ஆந்திர மாநிலத்தில் வசிக்கும் அவரது உறவினரான அகிலகுண்ட ரமேஷ், வ/24(வாய் பேச முடியாதவர்) என்பவரை சிறுமியின் பெற்றோர் கடந்த 14.5.2021 அன்று ஆந்திர மாநிலத்தில் திருமணம் செய்து வைத்துள்ளதும், பின்னர் இருவரையும் சென்னைக்கு அழைத்து வந்ததும் தெரியவந்தது. அதன்பேரில், மாவட்ட சமூக நல அலுவலர் ஜெயஸ்ரீ கொடுத்த புகாரின்பேரில், திருவொற்றியூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் போக்சோ மற்றும் குழந்தை திருமண தடை சட்டம் உள்ளிட்ட பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்து, சிறுமியை திருமணம் செய்த அகிலகுண்ட ரமேஷ், என்பவரை கைது செய்தனர். தலைமறைவாகவுள்ள சிறுமியின் பெற்றோரை பிடிக்க காவல் குழுவினர் தீவிர தேடுதலில் ஈடுபட்டுள்ளனர்.

விசாரணைக்குப் பின்னர் எதிரி அகில குண்ட ரமேஷ் 17.07.2021 அன்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

சாத்தூர் நகர காங்கிரஸ் கமிட்டி சார்பில் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் 119 வது பிறந்த தின விழா

சாத்தூர் , ஜூலை-19 2021: பெருந்தலைவர் காமராஜர் 119 வது பிறந்த தின விழா, சாத்தூர் நகர காங்கிரஸ் கமிட்டி சார்பில் நகர தலைவர் சாத்தூர் டி.எஸ்.அய்யப்பன் தலைமையில் , சாத்தூர் சட்டமன்ற தொகுதி இளைஞர் காங்கிரஸ் தலைவர் கும்கி கார்த்திக் முன்னிலையில் கொண்டாடப்பட்டது.சிறப்பு அழைப்பாளராக சிவகாசி சட்டமன்ற உறுப்பினர் அரசன்அசோகன் எம்எல்ஏ கலந்து கொண்டு ஏழை எளிய பெண்களுக்கு சேலை மற்றும் நல உதவிகளை வழங்கினார்கள்.

சாத்தூர் படந்தால் கிராமத்தில் நடைபெற்ற பெருந்தலைவர் காமராஜர் 119 வது பிறந்த நாள் விழாவில் ,சாத்தூர் நகர காங்கிரஸ் கமிட்டி தலைவர் சாத்தூர் டி.எஸ்.அய்யப்பன் தலைமையில், அனல்ரமேஷ் முன்னிலையில் ஆயிரம் பேருக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. சிவகாசி சட்டமன்ற உறுப்பினர் அரசன்அசோகன் எம்எல்ஏ, விருதுநகர் கிழக்கு மாவட்ட

காங்கிரஸ் கமிட்டி துணைத்தலைவர் அரசன் ஜி.வி.கார்த்திக் , விருதுநகர் மேற்கு மாவட்ட பொதுச்செயலாளர் எம்.ஜோதி நிவாஸ் பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கினார்கள்.

விருதுநகர் மாவட்ட செயலாளர் சந்திரன், கிழக்கு வட்டார தலைவர்

சுப்பையா,நகர துணைத் தலைவர் சின்னப்பன், நகரபொதுச் செயலாளர் ரவி ,நகர இளைஞரணி தலைவர் சதாம் உசேன், நகர மாணவரணி தலைவர் சங்கர் பாண்டியன், ஒன்றிய மாணவரணி தலைவர் மணிவண்ணன், அண்ணாநகர் இளங்கோவன் , ஹரிகிருஷ்ணன், சிறுபான்மை பிரிவு தலைவர் ரஜப்தீன், கோவிந்தராஜ், வரதன் ,டெய்லர் மாரியப்பன், இருக்கன்குடி கணேசன், காங்கிரஸ் பிரமுகர் பாலு, நாயக்கர் இளைஞர் அணி ஒன்றிய தலைவர் விக்னேஷ் காந்தி, பரத் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

தருவைக்குளம் காவலர் கனகவேல் சாலை விபத்தில் மரணம்
